# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# தனி அலுவலர் திரு.ஆ.தாணுமூர்த்தி அவர்களின்
# அவசர கூட்ட நடவடிக்கை நாள் 04.09.2020
## தீர்மான நகல்

கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் அவசரக்கூட்டம் வருகிற 04.09.2020ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ளது. கீழ்காணும் பொருள் பற்றி முடிவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தனி அலுவலர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

**1).** கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம் வார்டு – B, பிளாக் – 23, T.S.No. 13/1 (S.F. No. 126/1) இல் 2.28¾ ஏக்கர் (9216 சதுர மீட்டர்) பரப்பளவில் உள்ள காலியிடத்தினை குடியிருப்பு மனைப்பிரிவாக அனுமதி வழங்குமாறு திரு. K.D. ஜெகன்நாதன் மற்றும் திரு. A.P. ஆறுமுகம், ஆகியோரின் விண்ணபத்தின் பேரில், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண். 2471/2019/எப் 1 நாள். 23.10.2019 இல் கருத்துரு அனுப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 2564/2019/தி.ம.2 நாள். 03.03.2020 இல் மேற்படி மனைப்பிரிவிற்கான சாலை அமைப்பு வரைபடத்திற்கு அனுமதி வழங்கியும் மனைப்பிரிவில் அமையும் சாலைகளையும், உள்ளாட்சிக்கு தானமாக பெற்று உள்ளாட்சியின் தீர்மானம் மற்றும் தானப்பத்திரம் ஆகியவற்றுடன் சாலைகள் தரமானதாக அமைக்கப்பட்டுள்ளது என்பதற்கான நகராட்சி பொறியாளரின் சான்றுடன் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து நகர்மன்ற தீர்மானம் எண். 40 நாள். 29.06.2020 இல் மேற்படி மனைப்பிரிவிற்கு உரிய ஆவணங்களுடன் இறுதி ஒப்புதல் வழங்க நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு அனுப்ப நகர்மன்றத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டது. மேற்காணும் ஒப்புதலின் படி இறுதி ஒப்புதல் வழங்கக் கோரி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 2471/2019/எப்1 நாள். 20.07.2020 இல் உரிய பிரேரானை அனுப்பப்பட்டது. மேற்காணும் மனைபிரிவிற்கு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் உத்தரவு ந.க.எண். 394/2020/ஈ.மா. 2 நாள். 26.08.2020 இல் இறுதி ஒப்புதல் நிபந்தனைகளுடன் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.2471/2019/எப்1)**

அலுவலகக்குறிப்பு :மன்றம் பதிவு செய்யலாம்.

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது, மன்றத் தீர்மான எண் 89

**2).** கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் (க.ச.எண். 69 B) வார்டு C பிளாக் – 15, நகரளவை எண். 25/1, மொடச்சூர் கிராமம் பகுதியில் 1268.50 சதுர மீட்டர் பரப்பளவுள்ள இடத்தில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் வணிக கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரி வரைபடம் மற்றும் ஆவணங்களுடன் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு நகராட்சி ஆணையர் வழியாக திரு.பி. வி. முத்துவேலப்பன் என்பவரால் விண்ணப்பிக்கப்பட்டது.

மேற்படி உத்தேச மனையிடத்தில் தரைதளத்தில் கட்டிடப் பணி முடிக்கப்பட்டு முதல் தளத்தில் பணி ஆரம்பிக்கப்பட்டு நிருத்தப்பட்டுள்ளது. கட்டிடப் பணி ஆரபித்தமைக்கு இவ்வலுவலகத்தின் வாயிலாக அறிவிப்பு (அ.க.எண்.21/2019/எப்1 நாள்.29.07.2019 (தரை தளம்) மற்றும் அ.க.எண். 27/2019/எப்1 நாள். 20.09.2019 (முதல் தளம்) ) இன் படி வழங்கப்பட்டுள்ளது. உத்தேசமனையிடமானது அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தின் படி களப்புக் குடியிருப்புப் பகுதியில் (Mixed Residential Use zone MR12) அமைகிறது. மேலும் அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்த திட்ட எண். 8 இல் வணிக உபயோக பகுதியில் அமைகிறது.

மனையிடத்தின் வடபுறம் வணிக பகுதியாகவும், தென்புற எல்லையில் வணிகம் மற்றும் குடியிருப்பு பகுதியாகவும் மேற்குபுறத்தில் குடியிருப்பாகவும் அமைந்துள்ளன.

மனையிடத்திற்கு அனுகுபாதையாக தென்வடல் நெடுஞ்சாலைத்துறை சாலை (கோபி – திருப்பூர் சாலை) அமைந்துள்ளது. உத்தேச மனையிடத்தில் எல்லையிலிருந்து வரையறுக்கப்பட்ட தூரத்திற்குள் ஆறு, ஏரி, குளம் மற்றும் குட்டை போன்ற நீர்நிலைகள் மற்றும் சுடுகாடோ அமையவில்லை. எனவே மனுதாரரின் உத்தேசங்கள் மற்றும் ஆவணங்களின் தொகுப்பு ஆகியவற்றை உரிய அனுமதி வேண்டி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 2685/2019/எப் 1 நாள். 09.12.2019 இல் கருத்துரு அனுப்பப்பட்டது.

மேற்படி கருத்துருவினை அடுத்து மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் உத்தரவு ந.க.எண். 154/2020/ஈ.ம.2 நாள். 26.08.2020 இல் மொடச்சூர் கிராமம், வார்டு சி, பிளாக் – 15, நகரளவை எண். 25/1, 25/2 இல் மனை பரப்பு 1469 சதுர மீட்டர், பரப்பளவில் உத்தேச தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட வணிகக் கட்டிடத்திற்கு 11 நிபந்தனைகள் மற்றும் 4 சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு கட்டிட அனுமதி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வுத்தரவினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.(ந.க.எண்.2685/2019/எப்1)

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது, மன்றத் தீர்மான எண் 90

# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# தனி அலுவலர் திரு.ஆ.தாணுமூர்த்தி அவர்களின்
# அவசர கூட்ட நடவடிக்கை நாள் 10.09.2020
# <u>தீர்மான நகல்</u>

கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் அவசரக்கூட்டம் வருகிற 10.09.2020ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ளது. கீழ்காணும் பொருள் பற்றி முடிவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தனி அலுவலர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

**1).** கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் தினசரி அங்காடி கட்டப்பட்டு 40 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் பழுதடைந்த நிலையில் உள்ள மேற்படி அங்காடியினை இடித்துவிட்டு புதியதாக அடித்தளத்தில் வாகன நிறுத்தம் மற்றும் தரைதளத்தில் கடைகள் கட்டக்கூடிய வகையில் விரிவான திட்டமதிப்பீடு ரூ.800 இலட்சத்தில் தயார் செய்து பணிக்கான நிதியினை ரூ.400.00 இலட்சம் நிதி மான்யமாகவும், ரூ.400.00 இலட்சம் கடனாகவும் டுபிட்கோ மூலம் பெற்று செயல்படுத்திட இந்நகராட்சி ந.ம.தீ.எண்.264 நாள்.31.01.2020 ல் அனுமதி அளிக்கப்பட்டு நிதி ஒதுக்கீட்டிற்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.4463/2012/இ1 நாள்.28.02.20 ல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தற்போது அரசாணை G.O(D)No.303 நாள்.9.9.20 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநிர் வழங்கல் (எம் ஏ.2) துறை இல் மேற்படி தினசரி அங்காடி கட்டும் பணியினை IUDM 2020 – 21 –ன் கீழ் செயல்படுத்திட கீழ்கண்டவாறு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

| Sl. No | District | Name of ULB | Name of Work | Proposed Cost | Appraised Cost | IUDM Share 2020-21 | ULB Share |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | Erode | Gobichetti palayam Municipality | Construction of Daily Market Building in Ward 'B',Block No.9, T.S.No.295/1,295/2, 295/3,296/1& 296/2 in Veerapandi Village, Gobichettipalayam | 800.00 | 699.78 | 419.78 | 280.00 |

மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4463/2012/இ1)

அலுவலக குறிப்பு 1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.280.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

அனுமதிக்கப்ட்டது, மன்றத் தீர்மான எண் 91

2. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம், வார்டு பி, பிளாக் – 20, நகரளவை எண். 9/1, 9/2, 10/1, 10/2, 23, 24/1, 24/2, 25/1 மற்றும் 25/2, சர்வே எண். 244பி, 247/1 மற்றும் 247/3 இல் உள்ள 385 செண்ட் (3.85 ஏக்கர்) காலியிடத்தினை முழுமைத்திட்டத்தில் உள்ள விவசாய பகுதியாக உள்ளதை குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்து தருமாறு 19.08.2020 ஆம் நாளிட்ட வி.கே. குமரேசன் மற்றும் 4 நபர்களால் கோரப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் 24.11.1982 ஆம் ஆண்டு அங்கீகாரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் மாற்றம் செய்யும் பொருட்டு அரசு ஆணை எண். 485 நாள். 04.06.1990 இல் வீட்டு வசதி வாரிய துறையில் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 32 (3) (பி) மற்றும் பிரிவுகள் 32 (2C) இன் படி திருத்திய முழுமைத் திட்டம் 2011 (Modified Master Plan Land Use 2011) 1992 ஆம் ஆண்டு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் பகுதியில் உள்ள வார்டு D, பிளாக் 20, T.S.No. 9/1, 10/1, 24/1 மற்றும் 25/1 இல் 1.64 ஏக்கரும் வார்டு D, பிளாக் 20, T.S.No. 9/2, 10/2, 24/2, 25/2 மற்றும் 23 இல் 2.21 ஏக்கரும் ஆகமொத்தம் 3.85 ஏக்கர் இடமானது அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 7 இன் படியும், மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தின் படியும், விவசாய பகுதி (Agriculture Usage) வகைப்பாட்டில் உள்ளது. மனையிடத்திற்கு அனுகுபாதையாக 18.50 மீட்டர் அகலமுள்ள மொடச்சூர் பஞ்சாயத்திற்குரிய சாலை அமைக்கப்பட்டுள்ளது. மனையிடத்தின் வடபுறம் குடியிருப்புகளும், விவசாய நிலங்களும் உள்ளன. தென்புறத்தில் பஞ்சாயத்து எல்லையில் குடியிருப்புகளும், அனுமதிக்கப்பட்ட மனைப்பிரிவுகளும் உள்ளன. மனையிடத்தின் கிழபுறம் விவசாய நிலங்களும், மேற்குப்புறத்தில் மொடச்சூர் ஊராட்சிக்கு சொந்தமான 18.50 மீட்டர் அகல தார்சாலைகளும் அமைந்துள்ளது.

மனையிடத்தினை சுற்றிலும் வரையறுக்கப்பட்ட தூரத்திற்குள் ஆறு, ஏரி, குளம் மற்றும் குட்டை போன்ற நீர் நிலைகள் ஏதும் அமையவில்லை. மேலும், சுடுகாடு, இடுகாடு ஆகியவைகளும் அமையப்பெறவில்லை. எனவே, மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு சொந்தமான 3.85 ஏக்கர் நிலத்தினை விவசாய உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகப் பகுதியாக நில உபயோக மாற்றம் செய்து தர மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை வழியாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய துறை அரசு செயலாளர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1886/2020/எப்1)

அலுவலக குறிப்பு :- மனுதாரர்கள் சமர்ப்பித்துள்ள நில உபயோக மாற்றம் தொடர்பான கருத்துருக்கள் மற்றும் ஆவணங்களை தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய துறை அரசு செயலாளர், சென்னை அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்ட்டது, மன்றத் தீர்மான எண் 92

3). கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கான 2020 – 2021 ம் ஆண்டுக்கான சொத்துவரி, காலியிடவரி மற்றும் குடிநீர்க்கட்டணங்கள் செலுத்த பொது மக்களுக்கு அறிவிப்புகள் 1 முதல் 30 வார்டு வரையிலானது கணினியில் பிரிண்டிங் எடுக்கவும், வருவாய் உதவியாளர்களுக்கான கேட்பு பதிவேடுகள் தயார் செய்து கொள்ளவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.17,000/– க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2223/2020/அ1)

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம்.

அனுமதிக்கப்ட்டது, மன்றத் தீர்மான எண் 93

4). கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான கரட்டூர் உரக்கிடங்கினை சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் (Ground Water) தர பரிசோதனை செய்து அதன் அறிக்கையை Pollution Control Board –க்கு சமர்பிக்க 05.08.2020 அன்று நடைபெற்ற Video Conference – ல் TNPCB மூலம் தெரிவிக்கப்பட்டது. அதன்படி 10.08.2020–ல் TNPCB உதவிபொறியாளர் உடன் கூட்டாய்வில் Compost Yard -ஐ சுற்றியுள்ள 10 இடங்களில் Borewell மற்றும் Open Well தண்ணீர் மாதிரி சேகரிக்கப்பட்டு TWAD நீர் பகுப்பாய்வு மையத்திற்கு அனுப்பி அதற்கான கட்டணம் ரூ.16520/– செலுத்தப்பட்டது.மேற்படி செலவினம் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.3395/2015/இ1)

அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

அனுமதிக்கப்ட்டது, மன்றத் தீர்மான எண் 94

# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# தனி அலுவலர் திரு.ஆ.தாணுமூர்த்தி அவர்களின்
# அவசர கூட்ட நடவடிக்கை நாள் 25.09.2020
## தீர்மான நகல்

கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் அவசரக்கூட்டம் வருகிற 25.09.2020ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ளது. கீழ்காணும் பொருள் பற்றி முடிவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தனி அலுவலர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

1). இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை மற்றும் காலியாக உள்ள கடைகளுக்கு 17–09–2020 ந் தேதியன்று மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு பொது ஏலம் கோரியதின் பேரில் பழைய ஆஸ்பத்திரி தெருவில் அமைந்துள்ள ஆட்டிறைச்சி கடை எண்26 க்கு மட்டும் கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு நபர்கள் மட்டும் உரிய ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு கலம் (3)ல் கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள்.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள நபர்கள் பெயர் மற்றும் விலாசம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள மாதவாடகை தொகை ரூ |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | ல.வெங்கடாஜலபதி<br>8/171 சீதாலட்சுமிபுரம்<br>கோபிசெட்டிபாளையம் | 17600/– |
| 2 | கே.கவின்பிரசாத்<br>256/13 லட்சுமி கார்டன்,மொடச்சூர்<br>கோபிசெட்டிபாளையம் | 18000/– |

மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கோரியுள்ள இரண்டு நபர்களில் வரிசை எண் (2) ல் கண்டுள்ள திரு.கே.கவின்பிரசாத் என்பவர் மாதவாடகை ரூ.18000/– க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கண்காணிப்பு குழுவில் நிர்ணயம் செய்யப்பட்ட மாதவாடகை ரூ.5500/–யை விட திரு.கே.கவின்பிரசாத் என்பவர் 12500/–க்கு கூடுதலாக கோரியள்ளார். திரு.கே.கவின்பிரசாத் என்பவர் மாதவாடகை ரூ.18000/–க்கு கோரியுள்ளதை ஏற்று உறுதி செய்து அரசாணை நிலை எண் 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.3.07.2007ன் படி 12 மாத வாடகை முழுவதும் செலுத்திய பின்பு கடை ஒப்படைக்கும் நாள்முதல் மூன்றாண்டுகளுக்கு கடை உரிமத்தினை அனுமதித்து ஆணை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3060/2016/அ3)

**அலுவலகக்குறிப்பு 1.** மன்றம் அனுமதி அளிக்கலாம்

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 95

# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# தனி அலுவலர் திரு.ஆ.தாணுமூர்த்தி அவர்களின்
# சாதாரண கூட்ட நடவடிக்கை நாள் 30.09.2020
# <u>தீர்மான நகல்</u>

கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் சாதாரணக்கூட்டம் வருகிற 30.09.2020ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ளது. கீழ்காணும் பொருள் பற்றி முடிவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தனி அலுவலர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

1). இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் **2020–**ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (க.எண். 1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

பதிவு செய்யப்பட்டது, மன்றத் தீர்மான எண் 96

2). இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் **2020–**ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (க.எண். 1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

பதிவு செய்யப்பட்டது, மன்றத் தீர்மான எண் 97

3). இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் ஆகஸ்ட் **2020–**ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (க.எண். 1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

பதிவு செய்யப்பட்டது, மன்றத் தீர்மான எண் 98

4). இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் 1.08.2020 முதல் 15.08.2020 ஆம் தேதி வரையான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (க.எண். 1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

பதிவு செய்யப்பட்டது, மன்றத் தீர்மான எண் 99

5). கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம், வார்டு A, பிளாக் – 7, க.ச.எண். 74, நகரளவை எண். 5/1B 1C – இல் உள்ள 1.88 ½ ஏக்கர், பரப்பளவு கொண்ட மனையினை கோபிசெட்டிபாளையம் முழுமைத்திட்டத்தின் படியும் கல்வி பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு உபயோகமாகவும், இணக்கமளிக்கப்பட்ட விரிவு அபிவிருத்திட்டம் 1 இல் கல்வி உபயோகப் பகுதியிலிருந்து குடியிருப்பு உபயோகமாக திட்ட மாற்றம் செய்து தருமாறு திரு.ராதாகிருஷ்ணன் மற்றும் திரு. நந்தக்குமார் ஆகியோரால் 19.03.2018 இல் விண்ணப்பிக்கப்பட்டது.

மேற்காணும் விண்ணபத்தின் பேரில் மேற்படி இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்திலும், அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 1 யிலும், கல்வி உபயோகம் (Educational Use zone) ஒதுக்கீட்டை மாற்றி குடியிருப்பு பகுதியாக நிலஉபயோகம் மாற்றம் செய்து தரக் கோரிய கருத்துருவினை நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க நகர் மன்ற தீர்மானம் எண். 288 நாள். 26.03.2018 இல் நகர்மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும், மேற்படி கருத்துருவை தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய துறை அரசு செயலாளர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க நகர் மன்ற தீர்மானம் எண். 17 நாள். 30.04.2018 இல் நகர்மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதனை அடுத்து மேற்காணும் நகர்மன்ற தீர்மானங்களின் படி அரசு செயலாளர் அவர்களுக்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் வழியாக இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 868/2018/எப்1 நாள். 02.05.2018 இல் கருத்துரு அனுப்பப்பட்டது. இதனை தொடர்ந்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் ஒ.மு.க.எண். 4661/2018/சே.ம.3 நாள். 04.04.2018 இல் உத்தேச நில உபயோக மாற்றம் கோரும் இடம் FMB வரைபடத்தில் உட்பிரிவு செய்தும், மேலும், நில உபயோக மாற்றம் கோரும் உத்தேசத்தின் மீது ஆட்சேபனை பெறும் பொருட்டு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழிகளில் பிரசுரம் செய்து மன்ற தீர்மானத்துடன் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

மேற்காணும் கருத்துருவின் மீது பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண். 15342/2018/சே.ம. 3 நாள். 29.04.2019 இல் அனுப்பப்பட்டது. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 9497/2019/TCP4 நாள். 11.02.2020 இல் திட்டமாற்ற உத்தரவிடப்பட்டும், மேற்படி திட்ட மாற்றம் தொடர்பான அறிவிக்கையினை தமிழ்நாடு அரசிதழ் எண். 10 நாள். 04.03.2020 இல் பிரசுரம் செய்யப்பட்டு இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. மேற்காணும் அறிவிக்கையினை பொது மக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை குறித்து தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்து அனுப்பி வைக்குமாறு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 670/2020/தி.ம.1 நாள். 27.05.2020 இல் தெரிவிக்கப்பட்டது. மேற்படி அறிவிக்கையினை மக்கள் குரல் மற்றும் TRINITY MIRROR ஆகிய தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் 12.06.2020 விளம்பரம் செய்யப்பட்டது. இதனை இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 868/2018/எப்1 நாள். 19.06.2020 இல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு விளம்பர நாளிதழ்கள் அனுப்பப்பட்டது. இதனை அடுத்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 670/2020/தி.ம.1 நாள். 27.05.2020 இல் மேற்காணும் விவரப்படியான நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் அறிவிக்கையினை பொது மக்கள் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை குறித்து மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்து அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து தமிழ்நாடு அரசிதழ் எண். 25 நாள். 17.06.2020 இல் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்காணும் நில உபயோக மாற்றம் குறித்து நாளிதழ்கள், தமிழ்நாடு அரசிதழ் மற்றும் மாவட்ட அரசிதழ்களில் பொது மக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகள் கோரப்பட்டதில் எவ்வித ஆட்சேபனையும் உரிய காலக்கெடுவிற்குள் வரப்பெறவில்லை. மேற்படி மாவட்ட அரசிதழ்களை மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 868/2018/எப்1 நாள். 03.09.2020 இல் அனுப்பப்பட்டது.

எனவே, மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் வீரபாண்டி கிராமம், வார்டு A, பிளாக் – 7, க.ச.எண். 74, நகரளவை எண். 5/1B 1C – இல் உள்ள 1.88 ½ ஏக்கர், பரப்பளவுள்ள இடத்தினை நகர் ஊரமைப்பு துறை சட்டம் 1971 பிரிவு 31 (2) இன் கீழ் கல்வி உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகமாக

மாற்றம் செய்து இறுதி உத்தரவு பிறப்பிக்க கோரி மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் வாயிலாக நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்து அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.868/2018/எப்1)

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 100

**6).** சென்னை உயர்நீதிமன்ற பதிவாளரால் சென்னை உயர் நீதிமன்றத்தில் S.A.No. 712/2001 என்ற வழக்கானது நிலுவையில் உள்ளதாகவும், இவ்வழக்கில் ஆணையர், கோபிசெட்டிபாளையம் நகராட்சி இரண்டாம் பிரதிநிதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், இவ்வழக்கிற்கு நகராட்சி சார்பில் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ, 30 நாட்களுக்குள் ஆஜர் ஆக வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கானது கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மொடச்சூர் கிராமம், வார்டு சி, S.F.No. 124/B – இல் உள்ள முத்து நகர் மனைப்பிரிவில் மனை எண். 5 இல் திரு. பச்சியப்பன் என்பவரால் கட்டப்பட்ட கட்டிட பணி தொடர்பாக ஏற்கனவே கோபிசெட்டிபாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.522/96 – இல் பெறப்பட்ட தீர்ப்பின் மீது மீண்டும் மேல் முறையீடு வழக்கு A.S. No. 9/2000 இன் படி வழக்கு முடிவுற்று தீர்ப்பு பெறப்பட்டுள்ளதாகவும், மேற்காணும் இரண்டு தீர்ப்புகளின் தொடர்ச்சியாக திரு. கோவிந்தசாமி த/பெ. மாரிமுத்து நாடார், என்பவரால் சென்னை உயர் நீதிமன்றத்தில் S.A.712/2001 இன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். இதற்கிடையில் W.P.No. 2993/2001 இன் படியும், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு தீர்ப்பானையும் பெறப்பட்டுள்ளது.

எனவே, சென்னை உயர் நீதிமன்றத்தில் S.A.No. 712/2001 இல் நகராட்சியின் சார்பாக வழக்காட திரு. ஆனந்த் அரசு வழக்கறிஞர் அவர்களை நியமனம் செய்யவும், அதற்காகும், வழக்கு கட்டணம் ரூ. 20000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2221/2020/எப்1)

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 101

**7).** கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மொடச்சூர் கிராமம், S.F.No.84D இல் திருமதி . காஞ்சனா என்பவருக்கு HSD பட்டா வழங்கியது தொடர்பாகவும், காஞ்சனா என்பவரின் கட்டிடம் கட்டியுள்ளது தொடர்பாகவும், அதில் தனக்கு உரிமை உள்ளது எனவும், மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் நீதிமன்றத்தின் வாயிலாக தமக்கு உரிமை வழங்கப்பட வேண்டும், எனவும், குறிப்பிட்டு O.S. No. 151/2020 இல் கோபி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வாதியாக திருமதி. காஞ்சனா அவர்களையும், 6 வது பிரதிவாதியாக கோபி நகராட்சி ஆணையர் அவர்களையும், சேர்த்து திரு. குப்புச்சாமி என்பவரால் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சியின் சார்பாக எதிர் வழக்காட நகராட்சி வழக்கறிஞர் திரு. கருப்பணன் அவர்களை நியமனம் செய்யவும், அதற்காகும், உத்தேச செலவினம் ரூ. 10000/– ற்கு மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2115/2020/எப்1)

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 102

**8).** கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்புவாகனம் TN 36 F 7005 –க்கு 4 ஜோடி டயர் மற்றும் டியுப்கள் விநியோகம் செய்து பொருத்தி தரும் பணிக்கு 29.09.2020 அன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | கோபி மோட்டார்ஸ்<br>ஜெ.ஜெ.நகர், கரட்டூர், கோபி | – ரூ.29,800 |
| 2. | சக்தி டயர்ஸ்<br>59, பஜனை கோவில் வீதி,கோபி | – ரூ.30,300 |
| 3. | பணித்துளி கார் டெக்கர்ஸ்<br>ஈரோடு மெயின் ரோடு, கோபி | – ரூ.30,500 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளை இறுத செய்திட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பிடுகிறது.(ந.க.எண்.313/2020/இ1)

**அலுவலக குறிப்பு** : வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள M/S கோபி மோட்டார்ஸ், ஜெ.ஜெ.நகர், கரட்டூர், கோபி அவர்களது விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 103

9).கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான கரட்டூர் பகுதியில் அமைந்துள்ள உரக்கிடங்கினை சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் (Ground Water) 10 சாம்பிள்கள் தரபரிசோதனை செய்தமைக்கான கட்டணம் ரூ.47,200/– (ரூபாய் நாற்பத்தோராயிரத்து இருநூறு மட்டும்) M/S GLens Innovation Labs Pvt Ltd, நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.(ந.க.எண்.3395/2015/இ1)

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 104

10). கோபிசெட்டிபாளையம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணியில் தினந்தோறும் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் மற்றும் தினசரி மார்க்கெட் ஆகிய பகுதிகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம்பிரித்து வாங்கப்படுகிறது. அவ்வாறு சேகரிக்கம் மக்கும் குப்பை 11.7 MT முறையே MCC மற்றும் Bio - Methenization Plant மற்றும் OCC முறையில் உரமாக்கப்படுகிறது. மேலும் 8.3 MT மக்காத குப்பை Ultra Tech Cement Factory அரியலூர் அனுப்பப்படுகிறது. தெரு ஓரங்களில் உள்ள செடிகள் மற்றும் புட்கள் வெட்டும் குப்பை மற்றும் மின்வாரிய ஊழியர்களால் வெட்டி அப்புறப்படுத்தப்படும் கழிவுகள் எரிக்க Incinerator தேவைப்படுவதால் ஒளிரும் ஈரோடு அமைப்பின் மூலம் CTW அங்கீகாரம் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் பெற வேண்டும் என கடிதம் வரப்பெற்றுள்ளது. Online Consent Management and monitoring System, இல் Online Industry Registration (OC) பதிவு செய்யப்பட்டுள்ளது. CTE அங்கீகாரம் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் இருந்து பெறுவதற்கு ரூ. 7400/– யை வரைவேலாலையாக District Environmental Engineer, TNPCB என்ற தலைப்பில் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1963/2020/எச்1)

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 105

11). கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் The Urban Learning Internship Program ன் கீழ் பயிற்சிக்காக ஏற்கனவே 5 B.E. பட்டதாரிகள் தேர்வு செய்திட ஒப்பந்தம் பெறப்பட்டுள்ளது.நகராட்சிகள் மண்டல இயக்குனரகம் திருப்பூர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற தகவல் படி தேர்வுநிலை நிலை நகராட்சிகள் 10 நபர்களுக்கு குறையாமல் மேற்படி திட்டத்தில் தேர்வு செய்திட தெரிவிக்கப்பட்டது. எனவே, பொது சுகாதார பிரிவிற்கு 'Sanitation Conservancy & Solid Waste Management' க்கு 4 நபர்கள் டிப்ளமோ பயின்றவர்கள் மற்றும் நகரமைப்பு பிரிவிற்கு 'Urban Planning Including Town Planning'Intern - ற்கு 2 நபர் டிப்ளமோ பயின்றவர்களை தேர்வு செய்திடவும், மேற்படி தேர்வு செய்யப்படும் 6 நபர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.2,000/– வீதம் ஒரு வருடத்திற்கு தொகை வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.1719/2020/இ1)

அலுவலகக் குறிப்பு : மன்றம் வழங்கலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 106

12). கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் விநியோகம் செய்யப்படும் குடிநீரின் தரம் கண்காணிக்கும் பொருட்டு மாதமாதம் 5 மாதிரிகள் எடுக்கப்பட்டு TAMILNADU WATER SUPPLY AND DRAINAGE BOARD (TWAD) நீர் பகுப்பாய்வு மையத்தில் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.எனவே, மாதிரி ஒன்றுக்கு ரூ.1652/– வீதம் 5 மாதிரிகளுக்கு ரூ.8260/– மாதம் ஒன்றுக்கு செலுத்த வேண்டியுள்ளது.மேற்படி 7 மாதங்களுக்கு (8260 x 7) = ரூ.57820/– ஆகும். 2020–2021 ஆம் ஆண்டிற்கான நீர் சோதனை மொத்த கட்டணம் ரூ.57820/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.1911/2020/இ2)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் வழங்கலாம்.
2. குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 107

**13).** இந்நகராட்சியில் பெறப்பட்டுள்ள ILL (Internet Leased Line) – ற்கு 2020–2021 ஆம் ஆண்டிற்கு வாடகை ரூ.1,07,138/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஏழாயிரத்து நூற்று முப்பத்தெட்டு மட்டும்) `AO Cash, BSNL என்ற பெயரில் செலத்துவதற்கும், செலவித்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்திடவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.(ந.க.எண்.2171/2013/இ1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தொகை செலத்தியமைக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 108

**14).** இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி அங்காடிகளில் அமைந்துள்ள கடைகள் இடிக்கப்பட்டு புதியதாக நவீன வசதிகளுடன் கூடிய தினசரி அங்காடி கட்டிடம் கட்டுவதற்காக உரிமதாரர்களை கடையினை காலிசெய்து நகராட்சி வசம் ஒப்படைப்பதற்கு ஏதுவாக கடை உரிமதாரர்கள் மீது முன்னெச்சரிக்கை மனுக்கள் (Caveat) நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு திரு.கே.கங்காதரன் அரசு வழக்கறிஞர் கோபி அவர்களை நியமனம் செய்யவும் அதற்கான வழக்கறிஞர் கட்டணம் மற்றும் இதர செலவினங்களை பொதுநிதியிலிருந்து ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2190/2020/அ3)

**அலுவலகக் குறிப்பு** : 1. அனுமதிக்கலாம்

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 109

**15).** கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கான இலவச சிறுநீர் கழிப்பிடம் தற்போது பெய்த மழையின் காரணமாக கீரிப்பள்ளம் ஓடையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஏற்கனவே பழுதடைந்த நிலையில் இருந்த இலவச சிறுநீர் கழிப்பிடத்தின் அடித்தள சுவர் சரிந்து விழுந்துள்ளது. அதன் காரணமாக சிறுநீர் கழிக்க வரும் பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு ஆபத்து நேரிட வாய்ப்புள்ளது. எனவே மேற்படி பழுதடைந்த இலவச சிறுநீர் கழிப்பிடத்தினை இடித்துவிட்டு அதே இடத்தில் புதிதாக சிறுநீர் கழிப்பிடம் கட்டப்பட வேண்டியுள்ளது.இதற்காகும் மதிப்பீட்டு செலவினம் ரூ.6,00,000/– ஆகும்(ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்).மேற்படி பணியினை மேற்கொள்ளவும், பயணிகள் பாதுகாப்பு கருதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.(ந.க.எண்.2209/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 110

**16).** கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி திடக்கழிவுகளை வீடு வீடாக சென்று மட்கும் குப்பை மற்றும் மட்காத குப்பைகளாக தரம் பிரித்து தூய்மைப் பணியாளர்களை கொண்டு பொது மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்டு வருகிறது. இதில் மறுசுழற்சிக்கு பயன்படுத்த இயலாத பிளாஸ்டிக் கழிவுகளை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரையின் படி சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு எரிபொருளாக அனுப்பப்பட்டு வருகிறது.

இவ்வாறு சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு பிளாஸ்டிக் கழிவுகளை லாரிகளில் லோடு ஏற்றுவதற்கு ஏதுவாக பண்டல் செய்வது மிகவும் அவசியமாகிறது. இந்நகராட்சியில் பண்டல் செய்வதற்கு ஏற்கனவே ஒரு ஹைட்ராலிக் பேலிங் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி ஹைட்ராலிக் பேலிங் இயந்திரம் வாங்க அதிகபடியான செலவு செய்யவேண்டியுள்ளதால் நிதிநிலையினை கருத்தில் கொண்டு 2 HP மோட்டாரில் இயங்கும் வகையிலான ஒரு பேலிங் இயந்திரம் வாங்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்படி 2 HP பேலிங் இயந்திரம் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 62000/– ற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.2370/2020/எச்1)

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 101

17). இந்நகராட்சியின் 2019 – 2020ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் தகவலுக்கும், பதிவுக்கும் வைக்கப்பிடுகிறது.(ந.க.எண்.1623/2018/அ2)

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 112

18). இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டுக் குத்தகை இனமான தினசரி சந்தையானது உயிர்கொல்லி நோயான கோவிட் – 19 கொரோனா வைரஸ் நோய்த் தொற்று தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தினசரி சந்தையயில் சமூக இடைவெளி இல்லாத காரணத்தினால் மொடச்சூரில் அமைந்துள்ள தான்தோன்றியம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள காலியிடத்தில் அவர்களின் சொந்த செலவில் கடை நடத்தி வருகிறார்கள்.

தற்பொழுது தினசரி சந்தை மற்றும் அதனை சுற்றி அமைந்துள்ள 33 கடைகள் இடிக்கப்பட்டு வாகன நிறுத்தங்களுடன் கூடிய நவீன வசதிகளுடன் புதிதாக கட்டிடம் கட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டதின் பேரில் கட்டுமான பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக மேற்படி தினசரி சந்தை மற்றும் அதனை சுற்றியுள்ள கடைகளை காலி செய்து பொறியியல் பிரிவில் ஒப்படைக்குமாறு இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் 19.09.2020 ந் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்நகராட்சி வருவாய் ஆய்வாளர் அவர்களின் 19.09.2020 ந் தேதிய குறிப்பில் 01.04.2020 முதல் தினசரி சந்தை கொரோனா தொற்று காலத்தில் இயங்காததாலும் அவ்விடத்தில் கட்டுமான பணி மேற்கொள்ளப்படவுள்ளதாலும், 24.03.2020 முதல் கொரோனா தொற்றால் மூடப்பட்ட தினசரி சந்தை கோவில் நிலத்தில் தினசரி சந்தை திறந்தவெளிக்கடைக்காரர்களால் அவர்களது சொந்த செலவில் சமூக இடைவெளியுடன் செயல்பட்டு வருவதாலும், இந்நகராட்சி ஆண்டு குத்தகை இனமான தினசரி சந்தை குத்தகை இனத்தின் உரிமையை 01.04.2020 முதல் நீக்கம் செய்யவும் 2020–2021 குத்தகை தொகையான ரூ. 22,05,000/– மற்றும் பணியாளர் சம்பளம் ரூ.3,86,232/– ஐ கணினி கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 113

19). இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணிகளை செய்வதற்கு 23.09.2020–ந் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் வார்டு எண்.6 கிருஷ்ணன் வீதி, கிட்டாசாமி வீதி, டூரி சுப்பரமணியம் வீதி சந்திப்பில் உள்ள பொது கிணறு தூர்வாரப்பட்டு மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் பணி | 2,40,000 | M/s. Explosive Enterprises | 0.62 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. Sasikala Electrical works | 21.56 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் வார்டு எண்.25 சிலேட்டர்ஹவுஸ் வீதியில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி செய்தல் பணி | 35,000 | M/s. Explosive Enterprises | 0.79 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. Sasikala Electrical works | 5.95 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

(ந.க.எண்.1364/2020/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு :–</u>**

1. மேற்படி பணிகளில் வ.எண்.1–க்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.62 சதவீதம் குறைவாக குறிப்பிட்டுள்ள M/s.Explosive Enterprises அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

2. மேற்படி பணிகளில் வ.எண்.2–க்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.79 சதவீதம் குறைவாக குறிப்பிட்டுள்ள M/s.Explosive Enterprises அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

3.

அனுமதிக்கப்பட்டது, மன்றத் தீர்மான எண் 114